கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
கலை கலாசார பீடம்
நான்காம் வருட முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு
2011 / 2012

# CRS 4113 In - depth Study of Major Religion and Text – Hinduism

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதேனும் இரு வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து ஏதேனும் இரு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

01. அ. இந்து சமயத்தின் அடிப்படை அம்சங்களைச் சுருக்கமாகத் தருக.
(10 புள்ளிகள்)

ஆ. இந்துசமய வீடுபேற்றிற்குரிய மார்க்கங்களில் ஒன்றாகிய பக்தி மார்க்கத்தினை பகவத்கீதையின் எடுத்துக்காட்டுக்களின் துணையுடன் விளக்குக.
(15 புள்ளிகள்)

02. அ. உபநிடதம் பற்றிய சுருக்கமான அறிமுகம் ஒன்றினைத் தருக.
(10 புள்ளிகள்)

ஆ. உபநிடதமானது இந்துசமய தத்துவ சிந்தனைகளில் எவ்வகையில் செல்வாக்கு பெற்றிருந்தது என்பதனைச் சுருக்கமாக விளக்குக.
(15 புள்ளிகள்)

03. அ. பகவத்கீதையை பின்வரும் தலைப்புக்களின் வழிநின்று அறிமுகப்படுத்துக.

(I) தோன்றிய காலம்
(II) தோற்றுவித்தவர்
(III) தொகுப்பு
(IV) உட்கொண்டிருக்கும் தத்துவங்கள்

(10 புள்ளிகள்)

ஆ. பகவத்கீதை கூறும் கர்மயோகச் சிந்தனையினை சுருக்கமாக விளக்குக. (15 புள்ளிகள்)

# பகுதி II

04. ஈசாவாசிய உபநிடதம் காட்டுகின்ற தத்துவ சிந்தனைகளை ஆராய்க.

(25 புள்ளிகள்)

05. சுவேதாஸ்வர உபநிடதம் குறிப்பிடுகின்ற பிரம்மம் பற்றிய கருத்துக்களை ஆதாரங்களுடன் தெளிவுபடுத்துக.

(25 புள்ளிகள்)

06. "உபநிடத மகாவாக்கியங்களில் ஒன்றாகிய "தத்துவமஸி" யின் விளக்கமாக பகவத்கீதை விளங்குகின்றது" என்ற கூற்றின் பொருத்தப்பாட்டினை தகுந்த ஆதாரங்களுடன் மெய்ப்பிக்குக.

(25 புள்ளிகள்)